**DEPOSITION OF WITNESS**

**In the Court of Judicial Magistrate No.II, Mettur**

**Case No : C.C.150/2025**

**Prosecution witness : அ.சா. 1** **Date : 05.06.2025.**

| | |
|---|---|
| **Name : தங்கவேல்** | **Caste :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Religion :** |
| **Taluk :** | **Age :** |

**(Accused present. )**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.
(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

**முதல் விசாரணை**

1) நான் தற்போது பனங்காட்டில் குடியிருந்து பெயிண்டர் வேலை செய்கிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். எங்கள் வீட்டிற்கு சற்று தள்ளி மதியழகன் வீடு உள்ளது. மதியழகன் மனைவி தற்கொலை செய்து இறந்துவிட்டார். எனது மனைவி பெயர் யமுனா ஆவார். யமுனா என்பவர் நோய் வாய் பட்டு இறந்துவிடுவார் என்று சொல்லி என்னை சாருலதா என்பவரை திருமணம் செய்து கொள்ள சொன்னார்கள். சாருலதா எனக்கு மகள் மாதிரி என்பதால் நான் அவரை திருமணம் செய்து கொள்ளவில்லை. அந்த சாருலதா 10ம் வகுப்பு தான் படித்து வருகிறார்.

2) இது சம்மந்தமாக மேட்டூர் மகளிர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்து என்னை போலீசார் விசாரித்தார்கள். மதியழகன் கொடுத்த புகார் சம்மந்தமாக கடந்த 01.02.2025ம் தேதி மாலை 4.30 மணிக்கு மேட்டூர் அனைத்து மகளிர் காவல் நிலைய காவல் ஆய்வாளர், மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திலிருந்தும் மற்றும் நீதிமன்றத்திலிருந்தும் மதியழகன் வீட்டில் விசாரித்துவிட்டு பிறகு எங்கள் வீட்டிற்கு வந்தார்கள்.

3) என்னை விசாரித்துவிட்டு சென்றுவிட்டார்கள். கடந்த 02.02.2025ம் தேதி மாலை 4 மணி சுமாருக்கு நான் உறவினருடைய விழாவிற்கு சென்றுவிட்டு திரும்ப வீட்டிற்கு வந்த போது எனது மனைவியிடம் மதியழகன் அவருடைய மகள் சாருலதா என் மீது பாசமாக உள்ளதாக சொன்னார். பிறகு என் மனைவி என்னிடம் இவ்வாறு சொன்னதாக சொன்னார். இது சம்மந்தமாக அன்றையதினம் 04.30 மணிக்கு மதியழகன் வீட்டிற்கு நான், என் மனைவி, என் அம்மா, என் மகன், மகள் ஆகியோருடன் சென்று கேட்ட போது நீ யார் கேட்பது என்று சொல்லி கெட்ட வார்த்தையால் தெவிடியா பையா என்று பேசினார்கள்.

4) பிறகு தடியை எடுத்து என் தலை உச்சியில் அடித்தார்கள். என் நெஞ்சின் மீது மதியழகன் காலால் எட்டி உதைத்தார். என் மனைவி தடுக்க வந்த போது மதியழகன் மற்றும் சாருலதா இருவரும் சுவற்றின் மீது தள்ளிவிட்டார்கள். எனக்கு இதனால் மயக்கம் ஏற்பட்டது. பிறகு தனியார் ஆம்புலன்ஸ் மூலம் மேட்டூர் அரசு மருத்துவமனைக்கு சென்று சிகிச்சையில் 5 நாட்கள் இருந்தேன். காவலர்கள் நடந்த விவரத்தை என்னிடம் வாக்குமூலமாக கேட்டார்கள். நான் நடந்த விவரத்தை சொன்னேன். அவர்கள் புகார் வாக்குமூலமாக பதிவு செய்தார்கள். புகார் வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது தான் அதில் உள்ள சங்கதிகள் எனக்கு தெரியும். **புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.1** ஆகும். போலீசார் என்னை விசாரித்தனர்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை–</u>** இல்லை.

ஒம்/– தே.மயில்சாமி
குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.2
மேட்டூர்.

**DEPOSITION OF WITNESS**

**In the Court of Judicial Magistrate No.II, Mettur**

**Case No : C.C.150/2025**

**Prosecution witness : அ.சா.2** **Date : 05.06.2025.**

| | |
|---|---|
| **Name : யமுனா** | **Caste :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Religion :** |
| **Taluk :** | **Age :** |

**(Accused present. )**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.
(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

**முதல் விசாரணை**

1) நான் தற்போது பனங்காட்டில் குடியிருந்து வருகிறேன். அ.சா.1 என் கணவர் ஆவார். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். எங்கள் வீட்டிற்கு சற்று மேலே மதியழகன் வீடு உள்ளது. மதியழகன் மனைவி மருந்து குடித்து இறந்துவிட்டார். எனக்கு எந்த வியாதியும் இல்லை. மதியழகன் மற்றும் அவருடைய மகள் சாருலதா, மனைவி குணவதி ஆகியோர் எங்கள் வீட்டிற்கு வந்து செல்வார்கள். கந்தனூரிலிருந்து குணவதி இறப்பதற்கு ஒரு வாரம் முன்பாக எங்கள் வீட்டிற்கு வருவதை நிறுத்திவிட்டார்கள். பிறகு எங்களுக்குள் பேச்சு வார்த்தை இல்லை.

2) எனது கணவரை சாருலதா என்பவர் திருமணம் செய்து கொள்ள நான் கேட்டதாக சொல்லி என் மீது வழக்கு கொடுத்துள்ளார்கள். எனது கணவரை சாருலதா என்பவருக்கு திருமணம் செய்து கொள்ள கேட்கவில்லை. கடந்த 01.02.2025ம் தேதி மாலை 4.30 மணிக்கு மேட்டூர் அனைத்து மகளிர் காவல் நிலைய காவல் ஆய்வாளர், மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திலிருந்தும் மதியழகன் வீட்டில் விசாரித்துவிட்டு பிறகு எங்கள் வீட்டிற்கு வந்தார்கள்.

3) என்னை வழக்கு விஷயமாக கேட்டார்கள். கடந்த 02.02.2025ம் தேதி மாலை 3.30 மணி சுமாருக்கு நான் காட்டில் வேலை செய்த போது மதியழகன் என்பவர்

என்னிடம் வந்து அவருடைய மகள் சாருலதா எனது கணவர் மீது பாசமாக உள்ளதாக சொன்னார். என் மீது சாருலதா பாசமாக உள்ளதாக சொல்லியும், அடிக்கடி வீட்டிற்கு வருமாறும் சொன்னார். இந்த விவரத்தை நான் என் கணவரிடம் சொன்னேன். அன்றையதினம் 04.30 மணிக்கு மதியழகன் வீட்டிற்கு நான், என் கணவர், என் அம்மா, என் மகன், மகள் ஆகியோருடன் சென்று கேட்ட போது தடியை எடுத்து அ.சா.1யை தலையில் அடித்தார்கள். மதியழகன் என்பவர் கெட்ட வார்த்தையால் தெவிடியா பையா என்று எனது கணவரை பேசினார்கள்.

4) நான் எனது கணவரை பிடிக்க சென்ற போது சாருலதா, மாதேஷ்வரி, மதியழகன் என்னை சுவற்றின் மீது தள்ளிவிட்டார்கள். பிறகு நான் மற்றும் என் கணவர் தனியார் ஆம்புலன்ஸ் மூலம் மேட்டூர் அரசு மருத்துவமனைக்கு சென்று சிகிச்சையில் எனது கணவர் 3 நாட்கள் இருந்தார். ஆஜரிலுள்ள எதிரிகள் தான் பிரச்சனை செய்தார்கள் என்று சாட்சி திறந்த நீதிமன்றத்தில் அடையாளம் காட்டினார். போலீசார் என்னை விசாரித்தனர்.

<u>**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை–**</u> இல்லை.

ஒம்/– தே.மயில்சாமி
குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.2
மேட்டூர்.

**DEPOSITION OF WITNESS**

**In the Court of Judicial Magistrate No.II, Mettur**

**Case No : C.C.150/2025**

**Prosecution witness : அ.சா.3** **Date : 05.06.2025.**

| | |
|---|---|
| **Name : அலமேலு** | **Caste :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Religion :** |
| **Taluk :** | **Age :** |

**(Accused present. )**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.
(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

**முதல் விசாரணை**

1) நான் தற்போது பனங்காட்டில் குடியிருந்து வருகிறேன். அ.சா.1 என் மகன் ஆவார். எங்கள் வீட்டிற்கு மேலே மதியழகன் வீடு உள்ளது. மதியழகன் மனைவி மருந்து குடித்து இறந்துவிட்டார். சாருலதா மற்றும் குணவதி ஆகியோர் எங்கள் வீட்டிற்கு வந்து செல்வார்கள். பிறகு 10 நாட்கள் வரவில்லை.இது பற்றி நாங்களும் கண்டு கொள்ளவில்லை. மதியழகன் என்பவர் வேலைக்கு சென்றுவிட்டார்.

2) மதியழகன் என்பவர் அ.சா.1 ன் மீது சாருலதா என்பவர் தப்பாக எனது மகனிடம் நடந்து கொண்டதாக சாருலதா சொன்னார். மகளிர் காவல் நிலையத்தில் பொய்யான வழக்கு என்று சொல்லிவிட்டார்கள். உயர் நீதிமன்றத்திலிருந்து என் மகனை விசாரிக்க வந்தார்கள். எனது மகனை விசாரித்த போது நாங்கள் தப்பா நடந்து கொள்ளவில்லை என்று சொன்னார். கடந்த 02.02.2025ம் தேதி மாலை 4 மணி சுமாருக்கு எனது மருமகள் அ.சா.2 காட்டில் வேலை செய்த போது மதியழகன் என்பவர் எனது மருமகளிடம் வந்து அடிக்கடி அவர்களுடைய வீட்டிற்கு வரச்சொன்னார்கள். எனது மகன் சீர் விசேஷத்திற்கு சென்றுவிட்டு வந்த போது எனது மருமகள் நடந்தவற்றை

சொன்னார். பிறகு நான் மற்றும் என் மகன், மருமகள், பேரன் ஆகியோருடன் மதியழகன் வீட்டிற்கு சென்று கேட்ட போது தடியை எடுத்து அ.சா.1யை தலையில் அடித்தார்கள். மதியழகன் என்பவர் கெட்ட வார்த்தையால் தெவிடியா பையா என்று எனது மகனை பேசினார்கள்.

4) பிறகு எனது மகனை தனியார் ஆம்புலன்ஸ் மூலம் மேட்டூர் அரசு மருத்துவமனைக்கு சென்று சிகிச்சையில் எனது மகன் 3 நாட்கள் இருந்தார். ஆஜரிலுள்ள எதிரிகள் தான் பிரச்சனை செய்தார்கள் என்று சாட்சி திறந்த நீதிமன்றத்தில் அடையாளம் காட்டினார். போலீசார் என்னை விசாரித்தனர்.

<u>**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை–**</u> இல்லை.

ஒம்/– தே.மயில்சாமி
குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.2
மேட்டூர்.

**DEPOSITION OF WITNESS**

**In the Court of Judicial Magistrate No.II, Mettur**

**Case No : C.C.150/2025**

**Prosecution witness : அ.சா.3** **Date : 05.06.2025.**

| | |
|---|---|
| **Name : அலமேலு** | **Caste :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Religion :** |
| **Taluk :** | **Age :** |

**(Accused present. )**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.

(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

**முதல் விசாரணை**

1) நான் தற்போது பனங்காட்டில் குடியிருந்து வருகிறேன். அ.சா.1 என் மகன் ஆவார். எங்கள் வீட்டிற்கு மேலே மதியழகன் வீடு உள்ளது. மதியழகன் மனைவி மருந்து குடித்து இறந்துவிட்டார். சாருலதா மற்றும் குணவதி ஆகியோர் எங்கள் வீட்டிற்கு வந்து செல்வார்கள். பிறகு 10 நாட்கள் வரவில்லை.இது பற்றி நாங்களும் கண்டு கொள்ளவில்லை. மதியழகன் என்பவர் வேலைக்கு சென்றுவிட்டார்.

2) மதியழகன் என்பவர் அ.சா.1 ன் மீது சாருலதா என்பவர் தப்பாக எனது மகனிடம் நடந்து கொண்டதாக சாருலதா சொன்னார். மகளிர் காவல் நிலையத்தில் பொய்யான வழக்கு என்று சொல்லிவிட்டார்கள். உயர் நீதிமன்றத்திலிருந்து என் மகனை விசாரிக்க வந்தார்கள். எனது மகனை விசாரித்த போது நாங்கள் தப்பா நடந்து கொள்ளவில்லை என்று சொன்னார். கடந்த 02.02.2025ம் தேதி மாலை 4 மணி சுமாருக்கு எனது மருமகள் அ.சா.2 காட்டில் வேலை செய்த போது மதியழகன் என்பவர் எனது மருமகளிடம் வந்து அடிக்கடி அவர்களுடைய வீட்டிற்கு வரச்சொன்னார்கள். எனது மகன் சீர் விசேஷத்திற்கு சென்றுவிட்டு வந்த போது எனது மருமகள் நடந்தவற்றை

சொன்னார். பிறகு நான் மற்றும் என் மகன், மருமகள், பேரன் ஆகியோருடன் மதியழகன் வீட்டிற்கு சென்று கேட்ட போது தடியை எடுத்து அ.சா.1யை தலையில் அடித்தார்கள். மதியழகன் என்பவர் கெட்ட வார்த்தையால் தெவிடியா பையா என்று எனது மகனை பேசினார்கள்.

4) பிறகு எனது மகனை தனியார் ஆம்புலன்ஸ் மூலம் மேட்டூர் அரசு மருத்துவமனைக்கு சென்று சிகிச்சையில் எனது மகன் 3 நாட்கள் இருந்தார். ஆஜரிலுள்ள எதிரிகள் தான் பிரச்சனை செய்தார்கள் என்று சாட்சி திறந்த நீதிமன்றத்தில் அடையாளம் காட்டினார். போலீசார் என்னை விசாரித்தனர்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை–** இல்லை.

ஒம்/– தே.மயில்சாமி
குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.2
மேட்டூர்.

**DEPOSITION OF WITNESS**

**In the Court of Judicial Magistrate No.II, Mettur**

**Case No : C.C.150/2025**

**Prosecution witness : அ.சா.4** **Date : 05.06.2025.**

| | |
|---|---|
| **Name : முனுசாமி** | **Caste :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Religion :** |
| **Taluk :** | **Age :** |

**(Accused present. )**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.
(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

**முதல் விசாரணை**

1) நான் தற்போது பனங்காட்டில் குடியிருந்து டிரைவராக வேலை செய்து வருகிறேன். அ.சா.1 என் அண்ணன் ஆவார். என் அண்ணன் மீது மதியழகன் என்பவர் பொய் வழக்கு மகளிர் காவல் நிலையத்தில் கொடுத்தார். எனது அண்ணியை மதியழகன் தப்பாக பேசினார். எனது அண்ணனை மதியழகன் என்பவர் வீட்டில் வைத்து அடித்ததாக சொன்னார்கள். தடியால் மண்டையில் அடித்ததாக சொன்னார்கள். நான் அங்கு சென்று ஆம்புலன்ஸ் மூலமாக மேட்டூர் அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்று அ.சா.1யை சேர்த்து 3 நாட்கள் அங்கு அவர் சிகிச்சை பெற்றார். போலீசார் என்னை விசாரித்தனர்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை–**

2) சம்பவத்தை நான் நேரடியாக பார்த்தேனா என்றால் இல்லை. பொய் வழக்கு சம்மந்தமான விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. நான் போலீசார் விசாரிக்கும் போது முதல் விசாரணையில் சொன்னது போல் தான் சொன்னேன் என்றால் சரிதான். எனது அண்ணனுடன் சண்டை செய்த போது எங்கு சண்டை நடந்தது என்றால் என் அண்ணன் வீட்டில் நடந்தது. நான் சொன்னது போல் சொன்ன விதத்தில் சம்பவம் நடைபெறவில்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

**ஒம்/- தே.மயில்சாமி**
**குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.2**
மேட்டூர்.

# DEPOSITION OF WITNESS

## In the Court of Judicial Magistrate No.II, Mettur

**Case No : C.C.150/2025**

**Prosecution witness : அ.சா.5** **Date : 05.06.2025.**

| | |
|---|---|
| **Name : ஆண்டியப்பன்** | **Caste :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Religion :** |
| **Taluk :** | **Age :** |

**(Accused present. )**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.
(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டடப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

**<u>முதல் விசாரணை</u>**

1) நான் தற்போது பூராளகுட்டையில் குடியிருந்து கூலி வேலை செய்து வருகிறேன். அ.சா.1 என் பக்கத்து காட்டை சேர்ந்தவர் ஆவார். நான் ஆடு மேய்த்துக் கொண்டிருந்த போது கடந்த 04.02.2025ம் தேதி காலை 7 மணிக்கு கருமலைக்கூடல் உதவி ஆய்வாளர் வந்து வரைபடம் வரைந்தார்கள். நான் மற்றும் பிரசாந்த் இருவரும் சாட்சிகளாக கையொப்பம் செய்தோம். தங்கவேல் வீட்டை வரைபடமாக வரைந்தார்கள். அதில் நான் கையொப்பம் செய்தேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரிலுள்ள 1வது கையெழுத்து என்னுடையது தான். அதிலுள்ள விவரம் எனக்கு தெரியாது. பார்வை மகஜரிலுள்ள கையொப்பம் மட்டும் **அ.சா.ஆ.2** ஆகும். போலீசார் என்னை விசாரித்தனர்.

**சாட்சியம் அரசு தரப்பிற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்காத நிலையில், பிறழ் சாட்சியாக பாவிக்கக் கோரி, அரசு தரப்பில் கேட்கப்பட்டு அனுமதிக்கப்பட்டு சாட்சி பிறழ் சாட்சி என அறிவிக்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.**

**<u>அரசு தரப்பில் குறுக்கு விசாரணை–</u>**

2) கடந்த 04.02.2025ம் தேதி காலை 07.00 மணிக்கு நான் மற்றும் பிரசாந்த் இருவரும் சாட்சிகளாக இருந்த போது ரோஸ் கார்டன் மதியழகன் வீட்டு முன்பாக வரைபடம் வரைந்த விவரம் எனக்கு தெரியுமா என்றால் தங்க வேலு வீடு முன்பாக வரைந்தார்கள். பார்வை மகஜரிலுள்ள விவரத்தை கா ட்டி தான் என்னிடம் கையொப்பம் பெற்றார்கள் என்றால் ஆமாம். மகஜரிலுள்ள விவரம் தெரிந்து தான் கையொப்பம் செய்தேன் என்றால் ஆமாம்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை–**

3) பார்வை மகஜரிலுள்ள விவரம் எனக்கு தெரியாது என்றால் ஆமாம். ஆடு மேய்த்துக் கொண்டிருந்த என்னை அழைத்து கையொப்பம் போட சொன்னதால் நான் போட்டேன். வழக்கு விவரம் எனக்கு தெரியாது என்றால் ஆமாம்.

மறுவிசாரணை இல்லை.

ஒம்/– தே.மயில்சாமி
குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.2
மேட்டூர்.

**DEPOSITION OF WITNESS**

**In the Court of Judicial Magistrate No.II, Mettur**

**Case No : C.C.150/2025**

**Prosecution witness : அ.சா.6** **Date : 05.06.2025.**

| | |
|---|---|
| **Name : பிரசாந்த்** | **Caste :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Religion :** |
| **Taluk :** | **Age :** |

**(Accused present. )**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.
(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

**முதல் விசாரணை**

1) நான் தற்போது பூராளகுட்டையில் குடியிருந்து பெயிண்டிங் வேலை செய்து வருகிறேன். அ.சா.1 எனக்கு பழக்கம் ஆவார். கடந்த 04.02.2025ம் தேதி காலை 10 மணிக்கு கருமலைக்கூடல் உதவி ஆய்வாளர் வந்து வரைபடம் வரைந்தார்கள். நான் மற்றும் ஆண்டியப்பன் இருவரும் சாட்சிகளாக கையொப்பம் செய்தோம். அதில் நான் கையொப்பம் செய்தேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரிலுள்ள 2வது கையெழுத்து என்னுடையது தான். அதிலுள்ள விவரம் எனக்கு தெரியும். பார்வை மகஜர் **அ.சா.ஆ.3** ஆகும். போலீசார் என்னை விசாரித்தனர்.

**குறுக்கு விசாரணை–**

2) தங்கவேலு வீட்டு முன்பாக தான் வரைபடம் வரைந்தார்கள் என்றால் ஆமாம். அந்த வரைபடத்தில் நான் கையொப்பம் செய்தேன் என்றால் ஆமாம். கையொப்பம் செய்த தாளில் என்ன விவரம் எழுதப்பட்டிருந்தது என்ற விவரம் தெரியாது என்றால் ஆமாம். நான் போலீசார் கேட்டதால் தான் கையொப்பம் செய்தேன் என்றால் ஆமாம்.

மறுவிசாரணை இல்லை.

ஒம்/– தே.மயில்சாமி
குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.2
மேட்டூர்.